# சிலுவைப் பாதை

தொகுப்பு : அருட்திரு **ஆ. சிலுவை முத்து**, ச.ச.



# சிலுவைப் பாதை

தொகுப்பு : ஆ. சிலுவை முத்து, ச.ச.

## தொடக்கவுரை

இந்த விவிலியத் திருச்சிலுவைப் பாதையானது, திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால், 1991 ஆம் ஆண்டு, உரோமையில் உள்ள கொலோசியத்தில் புனித வெள்ளியின்போது செபிக்கப்பட்டதாகும். திருச்சபையின் மரபு சிலுவைப்பாதையிலிருந்து சற்று மாறுபட்டதாகும். சில நிலைகள் விவிலியத்தில் நேரடியாக இல்லாததால், சற்றே மாறுபட்ட நிலைகளைக் கொண்டிருக்கும். விவிலியத்தை மையப்படுத்தி இயேசுவின் பாடுகளைத் தியானிக்க 27.04.2014 அன்று புனித நிலைக்கு உயர்த்தபட்ட திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் நம்மை அழைக்கின்றார். அவரது சிந்தனைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுச் சிறுசிறு மாற்றங்களுடன் இச்சிலுவைப்பாதை தொகுக்கப்பட்டுள்ளது.

தலைமை குருக்களும் மக்களின் மூப்பர்களும் கயபா என்னும் தலைமைக் குருவின் மாளிகை முற்றத்தில் ஒன்று கூடினார்கள். இயேசுவைச் சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கொலை செய்ய அவர்கள் கலந்து ஆலோசித்தார்கள் (மத் 26: 3-4) இவ்வாறாக இயேசுவுக்கு எதிராக, கடவுள் தந்த பத்துக்கட்டளைகளில், ''கொலை செய்யாதே'' (வி.ப. 20:13) என்னும் கட்டளையை மீறி பாவம் செய்யத் துணிந்தார்கள். கொலை செய்யப்படும் அளவுக்கு இயேசு என்னதான் குற்றம் செய்தார்? இயேசு குற்றம் செய்ததற்காக அல்ல, ''உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்'' (யோவா 8:7) எனக் குற்றவாளிகளின் பாவங்களைச் சுட்டிக்காட்டி, ''மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற்1:15ஆ) என்று எடுத்துரைத்ததற்காகவே இயேசுவைக் கொல்லவும் துணிந்தனர்.

இயேசுவால் ஆட்கொள்ளப்பட்டோரும், இயேசுவை அன்பு செய்வோரும், தங்கள் பாவ நிலையை உணர்வோரும், கடவுளின் அன்பினை அனுபவிக்க விரும்புவோரும், இயேசுவின் பாடுகளைத் தியானித்து, தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள துணையாக இருப்பவை தான் இயேசுவின் பாடுகளின் பல்வேறு நிலைகள் கொண்ட சிலுவைப்பாதை. இயேசுவின் பாடுகள் மனித குலத்தின் பாவ நிலையையும் கடவுளின் பேரன்பையும் சிந்திக்க நம்மை அழைக்கின்றன. மனிதர்கள் நல்லவர்கள் என்பதற்காக இயேசு தம் உயிரைக் கொடுக்கவில்லை. மாறாக நாம் பாவிகள் என்பதற்காகத்தான் (உரோ 5:8) இயேசு இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்தார்.பாவத்தின் விளைவு சாவு. பாவத்தின் காரணமாக மனிதர்கள் கடவுளின் நிறைவாழ்வினை (யோவா 10:10) இழந்துவிடாமல் நிறைவாழ்வு (யோவா 17:3) பெறவே சிலுவையில் நம் பாவங்களை நினைவுகூர்ந்தார். நம் பாவ நிலையினை நினைந்து, மனம் வருந்தி, மன்னிப்பு வேண்டியவாறு இயேசுவின் அன்பின் உன்னதத்தைச் சிந்தித்து வழிநடப்போம்.

# 1. கெத்மனித் தோட்டத்தில் இயேசு வேண்டல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம் : மத் 26:36-46**

இயேசு சீடர்களுடன் கெத்சமனி என்னும் இடத்திற்கு வந்தார். அவர், ''நான் அங்கே போய் இறைவனிடம் வேண்டும்வரை இங்கே அமர்ந்திருங்கள்'' என்று அவர்களிடம் கூறி, பேதுருவையும் செபதேயுவின் மக்கள் இருவரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். அப்போது அவர் துயரமும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார். அவர், "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள்'' என்று அவர்களிடம் கூறினார். பிறகு, அவர் சற்று அப்பால் சென்று முகங்குப்புற விழுந்து,'' என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப் படியே நிகழட்டும்" என்று கூறி இறைவனிடம் வேண்டினார். அதன் பின்பு அவர் சீடர்களிடம் வந்து அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பேதுருவிடம், ''ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" என்றார். மீண்டும் சென்று, ''என் தந்தையே, நான் குடித்தாலன்றி இத்துன்பக்கிண்ணம் அகல முடியாதென்றால், உமது திருவுளப்படியே ஆகட்டும்" என்று இரண்டாம் முறையாக இறைவனிடம் வேண்டினார். அவர் திரும்பவும் வந்தபோது சீடர்கள் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களுடைய கண்கள் தூக்கக் கலக்கமாய் இருந்தன. அவர் அவர்களை விட்டு மீண்டும் சென்று மறுபடியும் அதே வார்த்தைகளைச் சொல்லி மூன்றாம் முறையாக இறைவனிடம் வேண்டினார். பிறகு சீடர்களிடம் வந்து,

‘‘இன்னும் உறங்கி ஓய்வெடுக்கிறீர்களா? பாருங்கள், நேரம் நெருங்கி வந்து விட்டது. மானிட மகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படுகிறார். எழுந்திருங்கள், போவோம். இதோ! என்னைக் காட்டிக்கொடுப்பவன் நெருங்கி வந்து விட்டான்” என்று கூறினார்.

## என் செபவாழ்க்கை எப்படி உள்ளது?

## வேண்டுதல் : இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.

- இறைவனிடம் வேண்டுவதற்காகக் கெத்சமனித் தோட்டத்திற்குச் சென்ற இயேசுவே,
- துயரமும் மனக்கலக்கமும் அடைந்தவராய் ‘‘எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது’’ என்று சீடர்களிடம் சொன்ன இயேசுவே,
- ‘‘என் தந்தையே முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படியே அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்’’ என்று மூன்று முறை வேண்டிய இயேசுவே,
- ‘‘சோதனைக்கு உட்படாதிருக்க, விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள். மனம் ஆர்வமுடையதுதான்: ஆனால் உடல் வலுவற்றது’’ என்று கூறி சீடர்கள் வலுவற்றிருப்பதையும் ஏற்றுக் கொண்ட இயேசுவே,
- வானத்தூதரால் வலுப்படுத்தப்பட்டவரான இயேசுவே,
- இறைவனிடம் வேண்டுகையில் இரத்த வியர்வை வியர்த்த இயேசுவே,
- இறைவனின் திருவுள்ளத்தை ஏற்றவராய் உறங்கிக் கொண்டிருக்கும் சீடர்களிடம் வந்து “எழுந்திருங்கள்” என்று சொன்ன இயேசுவே,

## அமைதியாக வேண்டல்:

‘‘என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்’’ என்று தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிட வேண்டிய இயேசுவே, எங்களுக்கு மாற்ற முடியாததை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும்,

மாற்ற முடிந்ததை மாற்றும் துணிவும், இவற்றைப் பாகுபடுத்தி அறிய ஞானமும் தந்தருள்வாய்.

**முதல்வர் :** உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

**அனைவரும் :** எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக.- ஆமென்.

■

## 2.இயேசுவைக் காட்டிக் கொடுத்தலும் கைது செய்தலும்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம் : மாற்கு 14: 43-46**

இயேசு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது பன்னிருவருள் ஒருவனான யூதாசு வந்தான். அவனோடு தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர், மூப்பர் ஆகியோர் அனுப்பிய மக்கள் கூட்டம் வாள்களோடும், தடிகளோடும் வந்தது. அவரைக் காட்டிக்கொடுக்கவிருந்தவன், ‘‘நான் ஒருவரை முத்தமிடுவேன். அவர்தாம் இயேசு, அவரைப் பிடித்துக் காவலோடு கொண்டு போங்கள்’’ என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். அவன் வந்ததும் உடனடியாக அவரை அணுகி, ‘‘ரபி’’ எனக் கூறிக்கொண்டே அவரை முத்தமிட்டான். அவர்களும் அவரைப் பற்றிப் பிடித்துக் கைது செய்தனர்.

**நாம் காட்டிக் கொடுத்த அல்லது காட்டிக் கொடுக்கப்பட்ட நிகழ்வுகள் யாவை?**

வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்..

- கெத்சமனித் தோட்டத்தில் சீடர்களிடம் பேசிக்கொண்டிருந்த போதே யூதாசு, தலைமைக் குருக்கள் மற்றும் மக்களின் மூப்பர்களின் கூட்டத்தால் சூழப்பட்ட இயேசுவே.
- "யாரைத் தேடுகிறீர்கள்? நாசரேத்து இயேசு "நான்தான்" என்று தன்னைத் தேடி வந்தவர்களிடம் சொன்னனவரான இயேசுவே.
- தன்னைத்தான் படைவீரர்கள் தேடி வந்துள்ளனர் என்பதை அறிந்தவராய் சீடர்களைப் போகவிடுமாறு படைவீரர்களிடம் கேட்டுக்கொண்ட இயேசுவே.
- "ரபி வாழ்க!" என யூதாசால் முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டவரான இயேசுவே.
- தலைமைக் குருவினுடைய பணியாளரின் காதை வாளால் துண்டித்த பேதுருவைக் கண்டித்து, துண்டிக்கப்பட்ட மால்குவின் காதையும் ஒன்று சேர்த்தவரான இயேசுவே.
- "வாளை எடுப்பவர் அனைவரும் வாளால் அழிந்து போவர்" என்று கற்றுத் தந்தவரான இயேசுவே.
- சீடர்களெல்லாம் உம்மைத் தனியே விட்டுவிட்டு ஓடிப்போனதையும் ஏற்றுக்கொண்ட இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

பேரிரக்கமும் பேரன்பும் நிறைந்த இயேசுவே! உம்மைக் காட்டிக் கொடுத்த யூதாசையும் பேரன்போடு நோக்கியவரே, உம்முடைய சீடர்களைப் போகவிடுமாறு படைவீரர்களைக் கேட்டுக்கொண்டவரே, நான் துன்பப்படாமலும் துயரப்படாமலும் இருக்க எனக்காகவே துன்பப்பட்டவரே, என் துன்பங்களை உம் துன்பங்களின் துணையோடு எதிர்கொள்ள அருளும் ஆசியும் தாரும்.

முதல்வர் ; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. - ஆமென்.

# 3. தலைமைச் சங்கத்தின் முன்னிலையில் இயேசு.

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்; லூக் 22:66-71**

பொழுது விடிந்ததும் மக்களின் மூப்பர்களும் தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் கூடிவந்தார்கள்; இயேசுவை இழுத்துச் சென்று தங்கள் மூப்பர் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள். அவர்கள், "நீ மெசியா தானா? எங்களிடம் சொல்" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "நான் உங்களிடம் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்; நான் உங்களிடம் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டீர்கள். இதுமுதல் மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார்" என்றார். அதற்கு அவர்கள் அனைவரும், "அப்படியானால் நீ இறைமகனா?" என்று கேட்டனர். அவரோ, "நான் இறைமகன் என நீங்களே சொல்லுகிறீர்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார். அதற்கு அவர்கள், "இன்னும் நமக்குச் சான்றுகள் தேவையா? இவன் வாயிலிருந்து நாமே கேட்டோமே" என்றார்கள்.

**நம்மிடையே பணியாற்றுவோரை நாம் எவ்வாறு நடத்துகின்றோம்?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- கைது செய்யப்பட்டவுடன் தலைமைக் குரு, அன்னா மற்றும் கயபாவிடம் இழுத்துச் செல்லப்பட்டு துன்பப்பட்டவரான இயேசுவே.
- "இக்கோவிலை இடித்துவிடுங்கள்" என்று நீர் சொன்னதை வேண்டுமென்றே உமக்கெதிராகப் பொருள் திரித்துக் குற்றம் சாட்டுவதையும் பொறுத்துக் கொண்ட இயேசுவே.
- பொய்க் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் தராது அமைதி காத்தவரான இயேசுவே.

- தலைமைக் குருவின் கேள்விகளுக்கு, மானிட மகனின் வல்லமையையும், அதிகாரத்தையும் பற்றி எடுத்துரைத்தவரான இயேசுவே.

- நீர் இறைமகன் தான் என்பதைச் தலைமைச் சங்கத்தார் அறிந்து கொள்ளும்படி செய்தவரான இயேசுவே.

- தலைமைக் குரு உம் கன்னத்தில் அறைந்ததையும் ஏற்றுக் கொண்ட இயேசுவே.

- நீர் பேசியதில் தவறு இருந்தால் சுட்டிக் காட்டுமாறு தலைமைக் குருவைக் கேட்ட இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

தலைமைச் சங்கத்தார் முன்னிலையில் கைதியைப்போல் விசாரிக்கப்பட்ட இயேசுவே, காவலரின் ஏளனத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளானவரே, இறைமகனாயிருந்தும் பாவம் செய்யும் மனிதரின் தீர்ப்பையும் ஏற்றவரே, உம் நீதி இருக்கையின் முன் நான் தீர்ப்பிடப்பட இருக்கிறேன் என்பதை நினைவில் இருத்திடச் செய்யும். என்னால் தவறாகத் தீர்ப்பிடப்பட்டு துன்பப்பட்டவர்களுக்கு ஆசி வழங்கியருளும்.

முதல்வர் ; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. - ஆமென்.

## 4. பேதுரு இயேசுவை மறுதலித்தல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: யோவான் 18:15-18**

சீமோன் பேதுருவும் மற்றொரு சீடரும் இயேசுவைப் பின்தொடர்ந்து வந்தனர். அந்தச் சீடர் தலைமைக் குருவுக்கு அறிமுகமானவர்; ஆகவே, இயேசுவுடன் தலைமைக் குருவின் மாளிகை முற்றத்தில் நுழைந்தார். பேதுரு வெளியில் வாயிலருகே நின்று கொண்டிருந்தார். அப்போது தலைமைக் குருவுக்கு அறிமுகமாயிருந்த அந்தச் சீடர் வெளியே வந்து, வாயில் காவலரிடம் சொல்லிப் பேதுருவை உள்ளே கூட்டிச் சென்றார். வாயில் காவல் செய்த அப்பணிப்பெண் பேதுருவிடம், ‘‘நீயும் இம்மனிதனுடைய சீடருள் ஒருவன் தானே?” என்று கேட்டார். பேதுரு, “இல்லை” என்றார். அப்போது குளிராய் இருந்ததால் பணியாளர்களும் காவலர்களும் கரியினால் தீமூட்டி அங்கே நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்.

**இறைவனை விட்டு நான் ஓடிப்போன நேரங்கள் யாவை?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- எல்லாரும் உம்மைவிட்டு ஓடிப்போய்விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிப்போக மாட்டேன் என்று பேதுரு சொன்னதையும் கேட்டவரான இயேசுவே.
- இன்றிரவில் சேவல் கூவுமுன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என பேதுருவுக்குச் சொன்ன இயேசுவே.
- ‘‘நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்’’ என்று பேதுரு கூறியதைச் சீடர்களோடு கேட்டவரான இயேசுவே.

- பேதுருவைப்போல் சீடர்களும் உம்மை மறுதலிக்க மாட்டோம் என்று சொன்னதையும் கேட்டவரான இயேசுவே.
- உம்மைக் கைது செய்தவுடன் தலைமைக் குரு கயபாவின் மாளிகைக்குப் போகையில் பேதுரு உம்மைப் பின் தொடர்ந்ததையும் கண்ணுற்றவரான இயேசுவே.
- ''நீர் சொல்வது என்னவென்று எனக்குப் புரியவில்லை'' "இம்மனிதனை எனக்குத் தெரியாது" என பணிப்பெண்ணுக்கும், "இம் மனிதனை எனக்குத் தெரியாது" என அங்கிருந்தவர்களுக்கும் மும்முறை பேதுரு உம்மை மறுதலித்ததைக் கண்ணுற்ற இயேசுவே.
- பேதுருவுக்கு நீர் சொல்லியவாறே நடந்ததை நினைவுகூறச் செய்து, பேதுரு மறுதலிக்கையில் அவரைக் கூர்ந்து நோக்கியவரான இயேசுவே.

## அமைதியாக வேண்டல்:

சூழ்நிலைகளுக்கேற்ப பேசியும், உணர்ச்சிகளின் தூண்டுதலுக்கு ஏற்ப நடந்தும், வாக்குறுதி அளித்தும், பேதுரு உம்மையே தெரியாது என்று மறுதலித்ததுபோல், நானும் வாழ்கிறேன் என்பதை நினைத்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறேன். இயேசுவே, நம்பிக்கையோடு வாழ முற்படுகின்றபோது ஆதிக்கச் சக்திகளுக்கும் ஆசைகளுக்கும் அடிமையாகிவிடுவதை உணர்கிறேன். என்னை ஏற்றுக் கொள்ளும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. - ஆமென்

# 5. அதிகாரிகள் முன் இயேசு கொண்டுவரப்படல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: லூக். 23; 1-11.**

திரண்டிருந்த மக்கள் அனைவரும் எழுந்து இயேசுவைப் பிலாத்தின்முன் கொண்டு சென்றனர். ''இவன் நம் மக்கள் சீரழியக் காரணமாக இருக்கிறான்; சீசருக்குக் கப்பம் கட்டக்கூடாது என்கிறான்; தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக் கொள்கிறான். இவற்றையெல்லாம் நாங்களே கேட்டோம்" என்று அவர்கள் இயேசுவின் மேல் குற்றம் சுமத்தத் தொடங்கினர். பிலாத்து அவரை நோக்கி, ''நீ யூதரின் அரசனா?" என்று கேட்க, அவர், "அவ்வாறு நீர் சொல்கிறீர்" என்று பதில் கூறினார். பிலாத்து தலைமைக் குருக்களையும் மக்கள் கூட்டத்தையும் பார்த்து, ''இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை" என்று கூறினான். ஆனால் அவர்கள், "இவன் கலிலேயா தொடங்கி, யூதேயா வரை இவ்விடம் முழுவதிலும் மக்களுக்குக் கற்பித்து அவர்களைத் தூண்டிவிடுகிறான்'' என்று வலியுறுத்திக் கூறினார்கள். இதைக் கேட்ட பிலாத்து, "இவன் கலிலேயனா?" என்று கேட்டான்; அவர் ஏரோதுவின் அதிகாரத்திற்கு உட்பட்டவர் என்று அவன் அறிந்து, அப்போது எருசலேமிலிருந்த ஏரோதிடம் அவரை அனுப்பினான். இயேசுவைக் கண்ட ஏரோது மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்; ஏனெனில், அவரைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரைக் காண நெடுங்காலமாய் விருப்பமாய் இருந்தான்; அவர் அரும் அடையாளம் ஏதாவது செய்வதைக் காணலாம் என்றும் நெடுங்காலமாய் எதிர்பார்த்திருந்தான். அவன் அவரிடம் பல கேள்விகள் கேட்டான். ஆனால், அவர் அவனுக்குப் பதில் எதுவும் கூறவில்லை. அங்கு நின்ற தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் அவர்மேல் மிகுதியான குற்றம் சுமத்திக் கொண்டிருந்தனர். ஏரோது தன் படைவீரரோடு அவரை இகழ்ந்து ஏளனம் செய்து, பளபளப்பான ஆடையை அவருக்கு உடுத்தி அவரைப் பிலாத்திடம் திருப்பி அனுப்பினான்.

**இயேசுவை நான் எதற்காகத் தேடுகின்றேன்?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- நீர் கொல்லப்பட வேண்டும் என்பதற்காகவே சதித்திட்டம் தீட்டப்பட்டு ஆளுநர் பிலாத்துவிடம் ஒப்படைக்கப்பட்ட இயேசுவே.
- மக்களால் பொய்க்குற்றம் சாட்டப்பட்ட இயேசுவே.
- தலைமை குருக்கள், மறைநூல் அறிஞர்களால் குற்றம் சுமத்தப்பட்ட இயேசுவே.
- ஆளுநர் பிலாத்துவால் ''நீ யூதரின் அரசனா?'' என்ற கேள்விக்கு "அவ்வாறு நீர் சொல்கிறீர்" என்று பதிலளித்த இயேசுவே.
- தலைமைக் குருக்கள், மூப்பர்கள் ஆகியோர் உம்மீது குற்றம் சாட்டியபொழுது பதில்மொழி கூறாமல் பிலாத்துவையும் வியப்புறச் செய்த இயேசுவே.
- தீர்ப்புப் பெற ஏரோதிடம் அனுப்பப்பட்ட இயேசுவே.
- ஏரோது முன்னிலையில் பதில் எதுவும் சொல்லாமல் நின்ற இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

'உண்மைக்குத் துணை போனால் துன்பம் வரும்' என்ற உணர்வுகளை முன்னிலைப்படுத்தி, 'பொய்சாட்சிக்குத் துன்பமே வராதது' என்று என்னையே அமைதிப்படுத்திக் கொண்டு, பொய்யர்களோடும் எத்தர்களோடும் சேர்ந்து பொய்யுரைத்துள்ளேன். தனிப்பட்ட காரியங்களிலும் பொய் சொல்லி பிறரைத் துன்புறுத்தியுள்ளேன். நீதிமானாகிய உமக்கெதிராக மக்கள் பொய்யுரைத்துத் தவறு செய்துள்ளது போன்று நானும் தவறுசெய்துள்ளேன் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். என் குற்றத்தை மன்னியும். என்னால் துன்பத்திற்கு ஆளானவர்களைத் தேற்றும். அவர்களுக்கு ஆசி வழங்கும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும்  இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக.  - ஆமென்.

## 6. படைவீரர்கள் இயேசுவை ஏளனம் செய்தல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: மத். 27: 27-31**

ஆளுநனின் படைவீரர் இயேசுவை ஆளுநன் மாளிகைக்குக் கூட்டிச் சென்று அங்கிருந்த படைப்பிரிவினர் அனைவரையும் அவர்முன் ஒன்று கூட்டினர்; அவருடைய ஆடைகளை உரிந்து, கருஞ்சிவப்பு நிறமுள்ள தளர் அங்கியை அவருக்கு அணிவித்தனர். அவர்கள் ஒரு முள்முடி பின்னி அவரது தலையின்மேல் வைத்து, அவருடைய வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர்முன் முழந்தாள்படியிட்டு, ‘‘யூதரின் அரசரே, வாழ்க!’’ என்று சொல்லி ஏளனம் செய்தனர்; அவர்மேல் துப்பி, அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர்; அவரை ஏளனம் செய்தபின், அவர்மேல் இருந்த தளர் அங்கியைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக இழுத்துச் சென்றனர்.

**நான் யாரையெல்லாம், எதற்காக ஏளனம் செய்துள்ளேன்?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- படைப்பிரினர் அனைவர் முன்பாக உம் உடைகளை உரித்ததையும் தாங்கிக்கொண்டவரான இயேசுவே.
- படைவீரர்கள் முள்முடி பின்னி உம் தலையில் வைத்ததையும் பொறுத்துக்கொண்ட இயேசுவே.
- யூதரின் அரசே வாழ்க! என படைவீரர்கள் உம் கன்னத்தில் அறைந்ததையும் தாங்கிக்கொண்ட இயேசுவே.
- உம் வலக்கையில் அரசனைப்போல கோலைக் கொடுத்து உம்மை ஏளனப்படுத்தியதையும் பொறுத்துக் கொண்ட இயேசுவே.

- உம் மேல் துப்பி, முழந்தாள் படியிட்டு, உம் கையிலிருந்த கோலால் உம் தலையில் அடித்ததையும் தாங்கிக்கொண்ட இயேசுவே.
- உமது முகத்தை மூடி ''உன்னை அடித்தவர் யார்? இறைவாக்கினனே, சொல்" என பலவாறு பழித்துரைக்கப்பட்டவரான இயேசுவே.
- படைவீரர்களால் ஏளனம் செய்யப்பட்டபின் சிலுவையில் அறைவதற்காக இழுத்துச் செல்லப்பட்டவரான இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

இயேசுவே, உடலை மையப்படுத்தி, நிறத்தை மையப்படுத்தி, பொருளாதாரத்தை மையப்படுத்தி, அறியாமையை மையப்படுத்தி, அறிவை மையப்படுத்தி, உணர்வுகளை மையப்படுத்தி என ஒருவரை ஏளனப்படுத்தும் போது நானும் சேர்ந்து ஏளனப்படுத்தி மகிழ்ந்துள்ளேன். நான் ஏளனப்படுத்திய நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டவர்கள் எத்துணை வேதனைப்பட்டிருப்பார்கள் என்பதை உம்மை படைவீரர்கள் ஏளனப்படுத்தியதன் மூலம் உணர்கிறேன். இயேசுவே என்னால் ஏளனத்துக்குள்ளானவர்கள் மீது உமது இரக்கமிகுக் கண்களைத் திருப்பி அவர்களைத் தேற்றும், நான் செய்த தவறுகளை உணர்ந்து, திருத்திக் கொள்ளவுமில்லை. என்னை மன்னியும் இயேசுவே.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. - ஆமென்.

# 7. இயேசு சிலுவையைச் சுமத்தல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: லூக் 23: 13-25**

பிலாத்து தலைமைக் குருக்களையும், ஆட்சியாளர்களையும், மக்களையும் ஒன்றாக வரவழைத்தான். அவர்களை நோக்கி, “மக்கள் சீரழியக் காரணமாய் இருக்கிறான் என்று இவனை என்னிடம் கொண்டு வந்தீர்களே; இதோ, நான் உங்கள் முன்னிலையில் விசாரித்தும் நீங்கள் சுமத்துகிற எந்தக் குற்றத்தையும் இவனிடத்தில் காணவில்லை. ஏரோதும் குற்றம் எதுவும் காணவில்லை; ஆகவே, அவர் இவனை நம்மிடம் திருப்பி அனுப்பியுள்ளார். மரண தண்டனைக்குரிய யாதொன்றையும் இவன் செய்யவில்லை என்பது தெளிவு. எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்” என்றான். ... திரண்டிருந்த மக்கள் அனைவரும், “இவன் ஒழிக! பரபாவை எங்களுக்கென விடுதலை செய்யும்” என்று கத்தினர். பரபா நகரில் நடந்த ஒரு கலகத்தில் ஈடுபட்டு கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டவன். பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய விரும்பி மீண்டும் அவர்களைக் கூப்பிட்டுப் பேசினான். ஆனால் அவர்கள், “அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்” என்று கத்தினார்கள். மூன்றாம் முறையாக அவன் அவர்களை நோக்கி, “இவன் செய்த குற்றம் என்ன? மரண தண்டனைக்குரிய குற்றம் ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை. எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்” என்றான். அவர்கள் அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த குரலில் வற்புறுத்திக் கேட்டார்கள். அவர்கள் குரலே வென்றது. அவர்கள் கேட்டபடியே பிலாத்துத் தீர்ப்பு அளித்தான். கலகத்தில் கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக் கொண்டபடியே அவன் விடுதலை செய்தான்; இயேசுவை அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டுவிட்டான்.

**பிறர்மேல் நான் சுமத்திய சிலுவைகள் யாவை?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- முள்முடியும் செந்நிற மேலுடையும் அணிந்தவராய் மக்கள் முன் வந்து நின்றவரான இயேசுவே.
- மரண தண்டனைக்குரிய குற்றம் ஒன்றும் இல்லாதபோதும் மரண தண்டனையை ஏற்றுக் கொண்டவரான இயேசுவே.
- அறையப்பட இருக்கும் சிலுவையை நீரே சுமந்தவரான இயேசுவே.
- சிலுவையைச் சுமக்கும்போது படைவீரர்களது ஏளனத்தையும் கசையடியையும் ஏற்றுக் கொண்ட இயேசுவே.
- பிலாத்துவின் அரண்மனையினின்று மண்டை ஓட்டு இடம் வரை சிலுவையைச் சுமந்தவரான இயேசுவே.
- குற்றவாளிகளில் ஒருவராக நடத்தப்பட்ட இயேசுவே.
- குற்றவாளிகள் சுமக்கும் சிலுவையைச் சுமந்த இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

ஒரு குற்றமும் செய்யாமல் கொடிய குற்றங்களுக்குக் கொடுக்கப்படும் கசையடியாலான மரண தண்டனையை, பிலாத்து கட்டளையிட்டதையும் ஏற்றுக்கொண்ட இயேசுவே. உண்மையை அறிந்தாலும், தெரிந்தாலும் பிறருக்குப் பயந்து மறைத்துள்ளேன். உண்மையை எடுத்துரைக்கத் தயங்கியுள்ளேன். உண்மையைப் பேசுவோர் பக்கம் துணை நிற்காமல் இருந்தேன். யூதர்களின் பொறாமையின் பொருட்டு கொடியவர்களின் சிலுவைச் சாவை நீ ஏற்றது போல உண்மைக்கு நான் சான்று பகிராததால் என்னால் துன்பத்திற்குள்ளானவர்களை, பாதிக்கப்பட்டவர்களை நினைத்து மனம் வருந்துகிறேன். தவறே செய்யாமல் நீர் தண்டனை அனுபவித்தீர். எனது தவறால் தண்டனை அனுபவித்தவர்களை விடுவித்தருளும். உண்மையைப் பேசி, பிறரைத் தண்டனைக்கு உட்படுத்தாமலிருக்க எனக்கு ஆற்றலைத் தாரும். நான் செய்த தவறுகளைப் பொறுத்தருளும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. – ஆமென்.

# ௮. சீரேன் ஊரைச் சார்ந்த சீமோன் இயேசுவுக்கு உதவுதல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: மத் 27: 32-33**

அவர்கள் வெளியே சென்ற போது சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்ற பெயருடைய ஒருவரைக் கண்டார்கள்; இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். “மண்டையோட்டு இடம்” என்று பொருள்படும், கொல்கொதாவுக்கு வந்தார்கள்.

**உதவி செய்து, உதவி பெற்று வாழ்ந்திருக்கின்றேனா?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- சிலுவையைச் சுமந்து செல்ல முடியாத அளவுக்கு வலுவிழந்தவரான இயேசுவே.
- படைவீரர்களது கசையடிகளையும், மக்களது ஏளனத்துக்கிடையிலும் சிலுவை சுமந்தவரான இயேசுவே.
- நீர் பாதியிலேயே இறந்துவிடாமலிருக்க உமக்குப் பதிலாக சீரேன் ஊரைச் சார்ந்த சீமோன் சிலுவையைச் சுமக்கக் கட்டாயப் படுத்தப்பட்டதைக் கண்ட இயேசுவே.
- வயல் வெளியிலிருந்து வந்து கொண்டிருந்தவரான சீமோனுக்கு உமது சிலுவையைச் சுமக்கும் வாய்ப்புத் தந்தவரான இயேசுவே.
- சீடர்கள் உம்மை விட்டு ஓடிப்போனாலும் சிலுவையைச் சுமக்க வயலில் உழைப்பவரது உதவியைப் பெற்றவரான இயேசுவே.
- உமக்காகச் சிலுவையைச் சுமந்ததின் பொருட்டு உம் சிலுவைப் பயணத்தில் சீமோனுக்கு நீங்கா இடம் அளித்தவரான இயேசுவே.
- உமக்குச் சிலுவையைச் சுமந்தவரான சீமோனை உம் மக்களால் உயர்வாக எண்ணப்பட வைத்தவரான இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

இயேசுவே, உம்மை நாடி வந்த அனைவருக்கும் நல்லதையே செய்து, நல்லதையே கற்பித்தீரே! நீர் சிலுவையைச் சுமக்க முடியாமல் கல்வாரி மலைக்கு உம்மைக் கொண்டு செல்லவும், பிலாத்துவின் கட்டளையை நிறைவேற்றவும் கட்டாயப்படுத்தி, உம் சிலுவையைச் சுமக்க வைத்ததின் வழியாக, உன்னதமான பேற்றினைச் சிரேன் ஊரைச் சார்ந்த சீமோன் பெற்றுக் கொண்டது எத்துணை உன்னதமானது, உயர்வானது என்பதை நினைத்து மகிழ்கிறேன். எனினும் இயேசுவே, வாழ்வின் நிகழ்வுகளில் யார் வழியாவது எப்படியாவது உம் அருள்பெறும் செயல்களில் எம்மையும் ஈடுபடுத்தும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்; எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. -ஆமென்.

## 9. எருசலேம் மகளிருக்கு ஆறுதல் கூறும் இயேசு.

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: லூக் 23: 27-31**

பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். ஏனெனில்

இதோ, ஒரு காலம் வரும். அப்போது ‘மலடிகள் பேறுபெற்றோர்’ என்றும், ‘பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறு பெற்றோர்’ என்றும் சொல்வார்கள். அப்போது அவர்கள் மலைகளைப் பார்த்து, ‘எங்கள் மேல் விழுங்கள்’ எனவும் குன்றுகளைப் பார்த்து, ‘எங்களை மூடிக்கொள்ளுங்கள்’ எனவும் சொல்வார்கள். பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால் பட்ட மரத்துக்கு என்னதான் செய்யமாட்டார்கள்!” என்றார்.

**ஆறுதல் பெற்று, ஆறுதல் அளிப்பவனாக நான் வாழ்கின்றேனா?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- பெருந்திரளாக உம்மைப் பின்தொடர்ந்து வந்த மக்கள்மீது பரிவு கொண்டவரான இயேசுவே.
- மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்கள் மீது பரிவு கொண்டவரான இயேசுவே.
- “எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்” என்று உமக்காக அழுதுகொண்டிருந்த பெண்களைத் தேற்றியவரான இயேசுவே.
- மக்களின் பாவ நிலையை உணர்ந்து, அவர்களுக்காக அழுமாறு அறிவுறுத்திய இயேசுவே.
- உம் துன்பங்களிலும் உம்மைத் தேடி வந்த மக்களுக்கு ஆறுதல் அளித்தவரான இயேசுவே.
- சிலுவையைச் சுமந்து செல்லும் போதும் உம்மைப் பின்தொடர்ந்த பெண்களைத் திரும்பிப் பார்த்து அவர்களோடு பேசியவரான இயேசுவே.
- “பச்சை மரத்திற்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால், பட்ட மரத்துக்கு என்னதான் செய்யமாட்டார்கள்” என்பதை எடுத்துரைத்தவரான இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

பாவிகளின் சிலுவையை சுமந்து கொடூரமான வேதனையும் கசையடிகளின் பாரத்தையும் அனுபவித்த இயேசுவே! நீர் சிலுவைச் சுமந்து வந்தபோது உம்மை சந்தித்த எருசலேம் மகளிருக்கு ஆறுதல் அளித்தீர். துன்பங்களால் நான் சோர்வடையும்போது உம்முடைய ஆதரவை நாடியிருக்கிறேன். துன்பங்களுக்கு மத்தியிலும் பிறருக்கு ஆறுதல் தரமுடியும என்பதை உம் வாழ்வில் வெளிப்படுத்தியுள்ளவரே, சுமை சுமந்து சோர்ந்து போகும் வேளையில் நான் உம் ஆறுதலைத் தேடவும், நானும் பிறருக்கு ஆறுதல் மொழி கூறவும் வேண்டிய ஞானமிகு உள்ளத்தைத் தாரும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. ஆமென்.

## 10. இயேசுவைச் சிலுவையில் அறைதல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: யோவான் 19:17-24**

இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு 'மண்டை ஓட்டு இடம்' என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில், கொல்கொதா என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள்;

அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து, குற்ற அறிக்கை ஒன்று எழுதி அதைச் சிலுவையின் மீது வைத்தான். அதில் 'நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்' என்று எழுதியிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்துக்கு அருகில் இருந்ததால் யூதருள் பலர் இந்தக் குற்ற அறிக்கையை வாசித்தனர். அது எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. யூதரின் தலைமைக் குருக்கள் பிலாத்திடம், "யூதரின் அரசன் என்று எழுத வேண்டாம்; மாறாக, 'யூதரின் அரசன் நான்' என்று அவனே சொல்லிக் கொண்டதாக எழுதும்" என்று கேட்டுக்கொண்டார்கள். பிலாத்து அவர்களைப் பார்த்து, "நான் எழுதியது எழுதியதே" என்றான். இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர் அவருடைய மேலுடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டனர். அந்த அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, "அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்குக் கிடைக்கும் என்று பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்" என்றார்கள். "என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது சீட்டுப் போட்டார்கள்" என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது.

**என் துன்பங்களை நான் எப்படி ஏற்றுக் கொள்கின்றேன்?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- மண்டை ஓட்டு இடம் எனப் பொருள்படும் கொல்கொதா இடத்திற்குச் சிலுவையைச் சுமந்து வந்தவரான இயேசுவே.
- கைகளிலும் கால்களிலும் கொடூரமான ஆணிகளால் அறையப்பட்டவரான இயேசுவே.
- குற்றவாளிகள் உம் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அறையப்பட்டு, குற்றவாளியாகக் காட்டப்பட்ட இயேசுவே.
- விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த போது படைவீரர்கள் மற்றும் வழிப்போக்கர்களின் ஏளனத்துக்கு உள்ளான இயேசுவே.

- ‘நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்’ என்ற குற்ற அறிக்கையினை எழுதி உம் சிலுவையின் மீது வைத்ததையும் பொறுத்துக் கொண்ட இயேசுவே.
- தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள், மூப்பர்களால் ஏளனம் செய்யப்பட்ட இயேசுவே.
- சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வரால் இகழப்பட்ட இயேசுவே.

## அமைதியாக வேண்டல்:

உம்மை சிலுவை சாவால், அதுவும் அவமானச் சின்னமான சிலுவையில் கொல்ல வேண்டும் என்று துடித்தவர்களின் எண்ணத்தை அறிந்தும், மண்டை ஓட்டு இடம் என்னும் இடத்திற்குச் சிலுவையைச் சுமந்து வந்தவரே. படைவீரர்கள் மற்றும் கள்வரின் பழிச்சொல்லுக்கு ஆளானாலும் கடவுளின் மீது கொண்டிருந்த நம்பிக்கையில் உறுதியாய் இருந்தவரே. நானோ எனது துன்பத்தில், உன்மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை இழந்திருக்கிறேன். அதை எண்ணி வருந்துகிறேன். மேலும் எனது சக்திக்கு, ஆற்றலுக்கு அப்பாற்பட்ட துன்பத்தை நீர் தரமாட்டீர் என்பதை நான் உணர்ந்திட தூய ஆவியின் ஞானத்தைத் தாரும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும்  இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக.  -ஆமென்.

## 11. நல்ல கள்வனுக்கு இயேசு பரிசளித்தல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: லூக்கா 23:32-42**

வேறு இரண்டு குற்றவாளிகளையும் மரணதண்டனைக்காக அவர்கள் அவரோடு கொண்டு சென்றார்கள். ‘மண்டை ஓடு’ எனப்படும் இடத்திற்கு வந்ததும், அங்கே அவரையும் வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக அக்குற்றவாளிகளையும் அவர்கள் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்போது, இயேசு, “தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” என்று சொன்னார். அவர்கள் அவருடைய ஆடைகளைக் குலுக்கல் முறையில் பங்கிட்டுக் கொண்டார்கள். மக்கள் இவற்றைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஆட்சியாளர்கள், “பிறரை விடுவித்தான்; இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும்'' என்று கேலி செய்தார்கள். படைவீரர் அவரிடம் வந்து புளித்த திராட்சை இரசத்தைக் கொடுத்து, ‘‘நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்” என்று எள்ளி நகையாடினர். ‘‘இவன் யூதரின் அரசன்'' என்று அவரது சிலுவையின் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்தது. சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், ‘‘நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று” என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, ‘‘கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!” என்று பதிலுரைத்தான். பின்பு அவன், “இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்” என்றான்.

**பழி சுமத்தியிருக்கின்றேனா?**

**நான் எவ்வாறு பிறரால் பழி சுமத்தப்பட்டிருக்கின்றேன்?**

## வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.

- சிலுவையின் பாரத்தினின்று தப்பித்துக் கொள்ள அழைத்த, தீயக் கள்வனுக்கு நல்ல கள்வனின் வழியாகப் பதிலளித்த இயேசுவே.
- 'அவரவர் செயல்களுக்கேற்ற தண்டனையை அவரவர் பெறுவர்' என்னும் உன்னதமான பாடத்தை நல்ல கள்வன் வழியாக வெளிப்படுத்திய இயேசுவே.
- நல்ல கள்வனால் 'இயேசுவே' என அன்பொழுக, பெயர் சொல்லி அழைக்கப்பட்டவரான இயேசுவே.
- நீர் ஆட்சியுரிமையோடு வருவீர் என்பதை நல்ல கள்வனுக்கு உணர்த்திய இயேசுவே.
- உமது ஆட்சியில் தன்னை நினைவிற்கொள்ளும் என்று விண்ணப்பித்த நல்ல கள்வனுக்குப் பதிலளித்த இயேசுவே.
- நல்ல கள்வனுக்கு 'நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்' என்று நிலைவாழ்வை அளித்த இயேசுவே.
- மரணத் தருவாயில் மனம் மாறினாலும், வாழ்வு உண்டு என்பதை உணர்த்திய இயேசுவே.

## அமைதியாக வேண்டல்:

நிலைவாழ்வை வாக்களிக்கும் இயேசுவே! உம் பாடுகளில் உம் அருகில் இருந்து உமது மாண்பினை உணர்ந்து மன்றாடிய நல்ல கள்வனுக்கு விண்ணக வாழ்வை வாக்களித்தவரே, நானும் உம் உன்னதத்தை, மாண்பினை உணர்கின்றேன். நீர் எனக்காக இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்ததையும் உணர்கின்றேன். எனினும் இயேசுவே, என் பாவத்தின் பொருட்டு நான் உமக்கும், எனக்கும் செய்த பாவங்களால் நிலைகுலைந்து போயிருக்கிறேன். இயேசுவே, என்னை நீர் தண்டித்தாலும் உம் பேரன்பினாலும், உம் நீதியாலும் எனக்கு மறுவாழ்வு அளியும். என்

குற்றங்களை என்னிடமிருந்து அகற்றும். என்னை மன்னியும் இயேசுவே, என்னை மன்னியும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. - ஆமென்.

## 12. சீடர்களை இயேசு தன் தாயிடம் ஒப்படைத்தல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: யோவான் 19:25-27**

சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், "அம்மா, இவரே உம் மகன்" என்றார். பின்னர் தம் சீடரிடம், "இவரே உம் தாய்" என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்.

**பெற்றோர், உற்றார் உறவினரை நான் எவ்வாறு நடத்துகின்றேன்?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- உம் சிலுவை அருகில் நின்றுகொண்டிருந்த உம் தாயையும், உறவினர்களையும், சீடரையும் கண்ட இயேசுவே.

- சிலுவை அடியில் உம் அன்புச் சீடர் ஒருவர் மட்டுமே நிற்கக் கண்ட இயேசுவே.
- சீடர்களது நிலையை உணர்ந்தவராய் உம் தாயிடம் முதலில் பேசியவரான இயேசுவே.
- சீடர்களை உம் தாயின் பிள்ளைகளாக்க "அம்மா, இவரே உம் மகன்" என்றவரான இயேசுவே.
- உம் சீடர்களுக்குத் தாயாக உம் தாயை நேரடியாக அழைத்த இயேசுவே.
- சீடரும் உம் தாயை ஏற்றுக் கொண்டதை கண்ணுற்ற இயேசுவே.
- சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போதும் உம் தாயை எங்களுக்குத் தாயாகக் கொடுத்த இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தாலும், சீடரோடும், உம் தாய் மரியாவோடும் உரையாடிய இயேசுவே! உம் சீடர்களது கோழைத்தனத்தை அறிந்தவராய் அவர்களைத் திடப்படுத்தவும் நீர் உம் சீடர்களாக அழைத்த அழைப்பினில் நிலைத்திருக்கவும் வேண்டி, கடவுளின் திருவுளத்தின் படி செயல்பட்டுக் கொண்டிருக்கும் உம் அன்னையிடம் ஒப்படைத்தீரே. உமது கட்டளையைச் சீடர் நிறைவேற்றியதையும் நாங்கள் அறியச் செய்தவரே, உமது அழைப்பினை நேரடியாகப் பெற்றவரான உம் தாய் மரியாவின் பிள்ளையாக, உம் தாயின் அரவணைப்பில், வழிகாட்டுதலில் உம்மைப் பின் தொடர இப்பாவியின் மேல் இரக்கமாயிரும். என் பாவங்களை மன்னியும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. -ஆமென்.

## 13. இயேசு சிலுவையில் உயிர்விடுதல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: லூக் 23:44-46**

ஏறக்குறைய நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. கதிரவன் ஒளி கொடுக்கவில்லை. திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது. "தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்.

**இயேசுவின் இறப்பிற்கு நான் எவ்வாறெல்லாம் இன்று காரணமாக இருக்கின்றேன்?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" எனும் திருப்பாடல் வரிகளை உரக்க செபித்தவரான இயேசுவே.
- "தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34) எனத் துன்புறுத்துபவர்களுக்காக மன்றாடிய இயேசுவே.
- உமது பெயரைச் சொல்லி மன்றாடிய நல்ல கள்வனுக்கு இரக்கம் காட்டிய இயேசுவே.
- திருப்பாடல் வரிகளுக்கு ஒப்ப (திபா 31:15) "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்" (லூக் 23:46) என்று தந்தையிடம் உமது ஆவியை ஒப்படைத்தவரான இயேசுவே.
- துன்பங்களுக்குப் பயந்து ஓடிப்போன சீடர்களைத் திடப்படுத்தவும், கடவுளின் திருவுளத்தை அறிந்து கடைசிவரை நிலைத்து நிற்கவும், "நான் ஆண்டவரின் அடிமை" (லூக் 1:38) என்ற உம் தாயை,

சீடருக்கு, ‘‘அம்மா, இவரே உம் மகன்’’ என்றும் ‘‘இவரே உம் தாய்’’ (யோவான் 19:26) என்றும் தந்தவரான இயேசுவே.

- தந்தை அளித்த துன்பக் கிண்ணத்தைத் தாழ்ச்சியோடு ஏற்றிருக்கிறீர் என்பதை நாங்கள் உணர்ந்திட, ‘‘தாகமாய் இருக்கிறது’’ (யோவான் 19:28) என்றவரான இயேசுவே.
- துன்பங்களிலும் தந்தையின் திருவுளத்தை முழுமையாய், முழுவதுமாய் நிறைவேற்றியவராய், ‘‘எல்லாம் நிறைவேறிற்று’’ (யோவான் 19:30) என்று உயிரை ஒப்படைத்தவரான இயேசுவே.

**அமைதியாக வேண்டல்:**

பாவிகளாகிய மனிதர்கள் தந்த அனைத்துத் துன்பத்தையும் தாங்கிக் கொண்டு அவர்களுக்காகத் தந்தையாகிய கடவுளிடம் மன்றாடியவரே, கடவுளின் திருவுளத்தை முழுமையாக நிறைவேற்றியும், சோர்ந்துபோன திடமற்ற சீடர்களை உம் தாயின் பாதுகாப்பில் ஒப்படைத்துவிட்டு உமது உயிரை ஒப்படைத்தவரே, பாவியான எனக்காக உயிரைக் கொடுத்தவரே, இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற உன்னதமான பாடத்தைக் கற்றுத் தந்துள்ளவரே, என் பொருட்டே உம் தாய் மரியாவைத் தந்துள்ளவரே, உம் அன்னையின் வழிகாட்டுதலில், வாழ்வின் அர்த்தத்தை அறிந்திட, வாழ்ந்திட துன்பங்களை எதிர்கொள்ள திடம் தாரும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்: எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும்  இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக.  -ஆமென்.

# 14. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்தல்

இறைமகன் இயேசுவே உம்மைப் போற்றி,
வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் உமது பாரமான சிலுவையைக்
கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**திருவிவிலியம்: லூக் 23:50-56**

யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் தலைமைச் சங்க உறுப்பினர், நல்லவர், நேர்மையாளர். தலைமைச் சங்கத்தாரின் திட்டத்துக்கும் செயலுக்கும் இணங்காத அவர் யூதேயாவிலுள்ள அரிமத்தியா ஊரைச் சேர்ந்தவர்; இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தவர். அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். அவர் அவரது உடலை இறக்கி, மெல்லிய துணியால் சுற்றிப் பாறையில் குடைந்திருந்த கல்லறையில் வைத்தார். அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. அன்று ஆயத்த நாள்; ஓய்வுநாளின் தொடக்கம். கலிலேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த பெண்கள் பின்தொடர்ந்து சென்று கல்லறையைக் கண்டார்கள்; அவருடைய உடலை வைத்த விதத்தைப் பார்த்து விட்டு, திரும்பிப் போய் நறுமணப் பொருள்களையும் நறுமணத் தைலத்தையும் ஆயத்தம் செய்தார்கள். கட்டளைப்படி, அவர்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

**துன்பங்களில் என் துணையிருப்பு எப்படி உள்ளது?**

**வேண்டுதல்: இயேசுவே, உம்மை அன்பு செய்கிறேன்.**

- யூதர்களுக்கு அஞ்சித் தங்களை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் இருந்து, உம் சீடரான அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவரை உம் அடக்க நிகழ்ச்சியில் வெளிப்படுத்திய இயேசுவே.

- பிலாத்துவின் அனுமதியால், உம் திருவுடலை எடுத்துச் செல்லும் பேற்றை அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்புக்கு அளித்த இயேசுவே.

- நிக்கதேமின் உள்ளத்தைத் தூண்டியெழுப்பி, உம் அடக்கத்திற்காக வெள்ளைப்போளமும், சந்தனத் தூளும் கொண்டு வர வைத்தவரான இயேசுவே.

- யூத அடக்க முறைப்படி நறுமணப்பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டப்பட்டவரான இயேசுவே.

- யோசேப்புக்கென்று வெட்டப்பட்டிருந்த கல்லறையில் அடக்கம் செய்யப்படடவரான இயேசுவே.

- மாட்டுத் தொழுவத்திலே பிறந்து, மாற்றானின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டவரான இயேசுவே.

- “மனுமகனுக்குத் தலைசாய்க்கவும் இடம் இல்லை” என்பதை வாழ்ந்து காட்டிய இயேசுவே

**அமைதியாக வேண்டல்:**

மனிதரின் நிலையாமையை நினைவுப்படுத்தி, மண்ணின்று உருவான மனிதரை மண்ணிற்கு கையளிக்கிறோம். இவ்வுலகம் யாருக்கும் நிலையானதல்ல; மண்ணில் முடிவின்றி வாழ முடியாது என்பதை உணர்த்திட கல்லறையில் யூத முறைமைப்படி, அதுவும் அயலாரின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசுவே! உம்மைப் போற்றுகிறோம். உண்மைக்குச் சான்று பகர்ந்தவரான உம்மீது பழி சுமத்தி, சிலுவை சாவால் தங்களது ஆதிக்கமே வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணுகிறார்கள் பொறாமை பிடித்தவர்கள். ஆனால் இயேசுவே, உம்முடைய ஆற்றலை குறுக்கிவிட்டதாகச் செயல்பட்ட குறுக்குப் புத்தி கொண்டவர்களைப் போல் நானும் செயல்பட்டுள்ளேன், உம்முடைய ஆற்றலை உணராமல் நான் வாழ்ந்திருக்கிறேன். அதற்காக என்னை மன்னியும்.

முதல்வர்; உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இயேசுவே!

அனைவரும்; எங்கள் மேல் இரக்கமாயிரும் (3 முறை)

மரித்த அனைவரும் இறைவனின் இரக்கத்தால் முடிவில்லா விண்ணக வாழ்வைப் பெறுவார்களாக. –ஆமென்.

## இறுதி மன்றாட்டு

பாவமென்னும் காரிருளில் வாழ்ந்து வந்த மக்களை மீட்க மனிதரான இயேசுவே! எம் முன்னோர்கள் அளித்த சிலுவை தண்டனையையும் கசையடிகளையும் தாங்கியவரே. உம் கன்னத்தில் அறைந்தவர்களையும், உம் முகத்தில் காரி உமிழ்ந்தவர்களையும், முள்முடிகளால் பின்னி உம் தலையில் அமுக்கிச் சித்திரவதைச் செய்தவர்களையும், சிலுவையைச் சுமந்து செல்கையில் கசையடிகளால் வதைத்தவர்களையும் ஏளனப் பேச்சுகளால் சாடியவர்களையும், ஆணிகளால் கைகளிலும் கால்களிலும் துளைத்தவர்களையும், கள்வனின் பழிப்புரைக்கு ஆளானாலும் "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று தெரியவில்லை'' (லூக் 23:34) எனத் தந்தையிடம் மன்னிப்புக்காக மன்றாடியவரே, உம்மை அன்பு செய்கிறேன்.

நானும் அவர்களைப் போலவே கர்வம், கோபம், கெட்ட நடத்தை, காம வெறி, சண்டைச் சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, நம்பிக்கையின்மை, பிளவு, பிரிவினை, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம், சோம்பல், வஞ்சகம், வெளிவேடம், சிற்றின்ப ஆசை, போன்ற பாவங்களாலும், குழப்பங்களை உருவாக்கி, திருப்பலிக்கு வராமல் வீண் வம்புச் செயல்களில் ஈடுபட்டு, வீம்புப் பாராட்டி, பெருமையடித்து, நன்மை செய்ய வாய்ப்பிருந்தும் செய்யாமல் விட்டு. இவ்வுலகின் ஆடம்பரங்களை நம்பி, அவற்றை நாடிச் சென்று செய்த பாவங்கள் அனைத்திற்காகவும், நன்மை செய்ய வாய்ப்புக் கிடைத்திருந்தும் செய்யாமல் விட்ட பாவத்திற்காகவும் மன்னிப்பு வேண்டுகிறேன்.

இயேசுவே, நொறுங்குண்ட நெஞ்சத்தைப் புறக்கணியாதவரே! நீர் எனக்காகப் பட்ட பாடுகளையும் பாவியான எனக்காக உயிர்கொடுத்து என்னை என் பாவங்களுக்காகத் தண்டியாமல் வாழ வைத்துக் கொண்டிருக்கும் உம் கருணைக்காக, உமக்கு நன்றி கூறுகின்றேன். என் பாவங்களை நினைந்து வருந்த எனக்கு மனம் தாரும். இத்தவக்காலத்தில், உம் அன்பு ஒப்புரவு அருட்சாதனத்தை அணுகி, பாவமன்னிப்புப் பெற்று, மனம் மாறிய கள்வனைப் போல் நானும் வாழ வரம் தாரும். இயேசுவே, என்மேல் இரக்கமாயிரும். "இயேசுவே. தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" (மாற்கு 10:47) இயேசுவே, இரக்கமாயிரும் – ஆமென்.

திருத்தந்தையின் கருத்துகளுக்காகச் செபிப்போம்.